# Chezhumai செழுமை




T I S T  F a r m e r s  H e l p  W o r l d w i d e  P r o b l e m

## The International Small Group & Tree Planting Program

TIST India: 19/8, Lake View Road, Kottur, Chennai 600 085, Tamil Nadu, India
Phone : +91 44 42188438 / Mobile: +91 9840299822 / Email: josephrexon@tist.org

## HELPLINE

For any information or help
Dial 9003020836 / 9003020839 / 9003020843

If you have any difficulty in TIST Program Dial 9840299822

Our landline: +91 44 42188438

Our email: josephrexon@tist.org

Our address: 19/8, Lake View Road, Kottur, Chennai 600085

## தொழில்முறை உதவி

எந்த தகவல் மற்றும் உதவிக்கு
டயல் பண்ணுங்கள் : 9003020836 / 9003020839 / 9003020843

உங்களுக்கு டி.ஐ.எஸ்.டி. திட்டத்தில் ஏதாவது கஷ்டம் இருப்பின்
டயல் பண்ணுங்கள் : 9840299822

எமது நிலவழி இணைப்பு :
+91 4442188438

எமது மின்அஞ்சல் :
Josephrexon@tist.org

எமது விலாசம் :
19/8 ஏரிக்கரைச் சாலை கோட்டூர், சென்னை 600085

## Note from TIST

Do not take long steps. All the members join together and work in your groves. How nice it will be if you work for your grove instead of having a worker, you need not share your voucher payment with your workers. You can enjoy the full benefit.

Do not pressurize your quantifier to quantify unseen trees/seedlings. Always accompany your quantifier during quantification and have boards for every grove to avoid wrong quantification. Get the quantification summary from the quantifier immediately after quantifying your groves



Quantifier doing quantification / கணக்கெடுப்பாளர் கணக்கெடுக்கிறார்

## டிஜஎஸ்டியின் செய்தி

அதிக வவுச்சர் தொகை பெற வேண்டும் என்று அகல கால் வைக்காதிர்கள் அது உங்களை கஷ்டத்தில் ஆழ்த்திவிடும். எல்லா அங்கத்தினரும் ஒன்று கூடி அவரவர் தோப்பில் வேலை செய்து வர வேண்டும். நீங்கள் ஒரு வேலையாளை அமர்த்துவதற்கு பதிலாக நீங்களே உங்கள் தோப்பில் வேலை செய்தால் வவுச்சர் பேமெண்ட்டும் பிரித்து கொடுக்க அவசியமின்றி நீங்களே உங்கள் தோப்பின் முழு பலனை அனுபவிக்கலாம்.

கணக்கெடுப்பு அதிகாரிகளை, காணப்படாத மரங்கள் மற்றும் நாற்றுகளை கணக்கில் சேர்த்துக் கொள்ள கட்டாயப்படுத்த கூடாது. ஆய்வாளர் தங்கள் தோப்பிற்க்கு வரும் முன் பெயர் பலகையை பொருத்தி தயராக காத்திருக்கவும். ஆய்வாளருடன் நீங்களே சென்று கணக்கெடுப்பு சரியாக நடக்கிறதா என்று சரிப்பார்க்கவும். ஆய்வு முடிந்தவுடன் ஆய்வின் தொகுப்பு ஒன்றை பெற்றுக் கொள்ளவும்.

## What is Carbon Trading?

Carbon Trading is a market based mechanism for helping mitigate the increase of carbon dioxide in the atmosphere. Carbon trading markets brings buyers and sellers of carbon credits together with standardized rules of trade.

## What is Carbon Credit?

You all are planting trees. These trees absorb carbon dioxide from the atmosphere, carbon dioxide is one of the important ingredient for the tree to produce its own food, the glucose. The trees turn carbon dioxide and water into food using energy from sunlight. The more a tree grows, means, the more carbon dioxide is absorbed by the tree. These absorbed carbons are called the carbon credits. Carbon credits are measured in tonnes of carbon dioxide. 1 credit = 1 tonne of carbon dioxide. These credits need to be authentic, scientifically based and comply with a regulatory body for these to be traded with confidence.

## கார்பன் வாணிகம் என்றால் என்ன ?

கார்பன் வாணிகம் வியாபாரத்தை அடித்தளமாக வைக்கப்பட்ட ஓர் பொறியமைப்பு, இந்த பொறியமைப்பு வாயு மண்டலத்தில் இருக்கும் கார்பன்–டை–ஆக்சைடு அளவை குறைப்பதற்கு உதவும். கார்பன் வாணிகம் சந்தை கார்பன் கிரெடிட்ஸ் வாங்குபவர் மற்றும் விற்பவர்களை நல்ல ஓர் சட்டத்திட்டங்களின் கீழ் வியாபாரம் செய்வதற்க்கு ஒன்று சேர்க்கிறது.

## கார்பன் கிரெடிட்ஸ் என்றால் என்ன ?

நீங்கள் மரங்களை நடவுசெய்கிறிர்கள். இந்த மரங்கள் வாயு மண்டலத்தில் இருந்து கார்பன்–டை–ஆக்சைடை உள்வாங்கி கொள்கிறது. கார்பன்–டை–ஆக்சைட் மரத்திற்க்கு உணவு தயாரிப்பதற்கான ஓர் சேர்மானமாகும். மரங்கள் கார்பன்–டை–ஆக்சைட் மற்றும் தண்ணீரை பயன்படுத்தி சூரிய ஒளியின் சக்தியோடு குளுக்கோஸ் என்ற ஓர் பொருளை தயாரிக்கிறது, இந்த குளுக்கோஸ் மரத்திற்க்கு உணவாகும். ஓர் மரம் அதிகமாக வளர்ந்து இருக்கிறது என்றால், அந்த மரம் அதிகமான கார்பன்–டை–ஆக்சைடை உள்வாங்கி இருக்கிறது என்று அர்த்தம். மரங்களால் உள்வாங்கப்பட்ட (அல்லது மரத்திற்க்குள் சேகரிக்கப்பட்ட) கார்பன் அளவை கார்பன் கிரெடிட்ஸ் எனப்படும். ஒரு கிரெடிட்ஸ் ஓர் ஆயிரம் கிலோ கார்பன்–டை–ஆக்சைட் ஆகும். இந்த கார்பன் கிரெடிட்ஸ் மெய்யானதாக, சரி நுட்பமான முறையில் இருக்க வேண்டும் மற்றும் அறிவியல் சார்ந்ததாகவும் நம்பிக்கையுடன் வியாபாரம் செய்வதற்க்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.



TIST members are planting trees and their trees are sequestering carbon dioxide
TIST உறுப்பினர்கள் மரங்களை நடவு செய்கிறார்கள், இந்த மரங்கள் கார்பன்–டை–ஆக்சைடை உள்வாங்கி கொள்கிறது

## Who buys Carbon credits?

Any entity that emits $CO_2$ to the atmosphere may buy the credits to balance their emissions.

## Who are the sellers of Carbon credits?

Entities that reduce their carbon emission may be able to sell their reductions to other emitters. In TIST, we sell carbon credits based on the accumulation of carbon in the trees planted by TIST participants.

## கார்பன் கிரெடிட்ஸ் வாங்குபவர் யார் ?

எந்த ஓர் நிறுவனம் கார்பன்–டை–ஆக்சைடை வெளியிடுகிறதோ, அதாவது வாயு மண்டலத்தில் கார்பன்–டை–ஆக்சைடின் அளவை அதிகரிக்கிறதோ, இந்த கார்பன் கிரெடிட்ஸ்சை வாங்கி அவர்களது நிறுவனத்தில் இருந்து வெளியிடப்படும் கார்பன்–டை–ஆக்சைடின் அளவை சம நிலைக்கு கொண்டு வர செய்யலாம்.

## கார்பன் கிரெடிட்ஸ்சை விற்ப்பவர் யார் ?

எந்த நிறுவனங்கள் அவர்களது நிறுவனத்தில் இருந்து வெளியிடப்படும் கார்பன்–டை–ஆக்சைடின் அளவை குறைக்கிறார்ளோ, அவர்கள் குறைக்கப்பட்ட கார்பன்–டை–ஆக்சைடின் அளவை கார்பன் கிரெடிட்ஸ்சாக விற்க்கலாம். TISTல் TIST உறுப்பினர்களால் நடப்பட்ட மரங்களில் சேகரிக்கப்பட்ட கார்பன் அளவை கார்பன் கிரெடிட்ஸ்சாக விற்கிறோம்.



All TIST Small Groups have signed the GHG agreement and given the rights to sell their carbon credits

எல்லா TIST சிறுகுழுக்களும் GHG ஒப்பந்தத்தில் கையெழுத்துமிட்டு கார்பன் கிரெடிட்ஸ்சை வியாபாரம் செய்வதற்க்கு அனுமதி கொடுத்துள்ளார்கள்

## Voucher distributed to Small Groups of Thirupathur Center

The Conservator of Forests, Vellore Circle, invited TIST India and TIST members to participate in one of their forestry activity meetings. In the meeting, the Conservator explained the activities of TIST to the farmers and told them to use TIST program effectively. He showed the TIST website through computer presentation to farmers and explained about the information stored in the website. He also distributed TIST vouchers to TIST small groups during the meeting.

## திருப்பத்தூர் மையத்தை சார்ந்த சிறுகுழுக்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது

வேலூர் வட்டத்தை சார்ந்த வனபாதுகாவலர் TIST இந்தியாவிற்கும் மற்றும் TIST உறுப்பினர்களுக்கும் திருப்பத்துரில் நடந்த வனத்துறையின் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பு அழைத்தார். அக்கூட்டத்தில் வனபாதுகாவலர் TISTன் திட்டத்தை பற்றி எடுத்துரைத்து கூட்டத்திற்க்கு வந்து இருந்த விவசாயிகளை TIST திட்டத்தை நன்கு பயன்படுத்துமாறு கூறினார். மேலும் அவர் கணிப்பொறி உதவுயுடன் TISTன் வலைதளத்தை விவசாயிகளுக்கு எடுத்துகாட்டி அதில் சேகரிக்கப்பட்டுள்ள விவரங்களை பற்றி கூறினார். கூட்டத்தில் கலந்து கொண்ட TIST சிறு குழு உறுப்பினர்களுக்கு வனபாதுகாவலர் TISTன் பற்று சீட்டை (ஊக்கத்தொகை) வழங்கினார்.



The Conservator of Vellore Circle distributing TIST Vouchers to TIST Small Groups
வனபாதுகாவலர் (வேலூர் வட்டம்) TIST சிறுகுழுக்களுக்கு TISTன் பற்றுச்சீட்டை வழங்குகிறார்

## Best Practice from a tree lover/grower in Ulundurpet

TIST coordinator came across a tree lover/grower in Ulundurpet. This person tells that, for planting teak trees pits should be dug two feet depth with two feet four sides. Mix some amount of coconut fiber with natural manure and fill the pit with 30-50 percent with the mixture of coconut fiber and manure, soak with water. Leave the pit open with this mixture for at least 10 days. After the 10 days, teak seedlings can be planted in the pit. The mixture of coconut fiber and manure helps the roots to go through easily, which allows the trees to grow well.

## மரங்களை அன்பாக வளப்பவரிடமிருந்து ஓர் சிறந்த பயிற்சி முறை

TIST ஒருங்கிணைப்பாளர் உளுந்துர்பேட்டையில் மரங்களை அன்பாக வளர்க்கும் ஒரு நபரை சந்தித்தார், இவர் கூறுகையில் தேக்குமரம் நடவுவதற்க்கு இரண்டுக்கு இரண்டு அடி குழி எடுக்க வேண்டும். இந்த குழியில் தேங்காய் நாரை இயற்கை உரத்தோடு கலந்து 30 லிருந்து 50% உயரத்திற்கு நிரப்ப வேண்டும் மற்றும் அதை தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். இந்த கலவையோடு குழியை குறைந்தது 10 நாட்களுக்கு திறந்து வைக்க வேண்டும். 10 நாட்களுக்கு பிறகு அக்குழியில் தேக்கு கன்றுகளை நடவு செய்ய வேண்டும். இந்த தேங்காய் நாறு மற்றும் இயற்கை உரம் வேர்களை எளிதாக வளர உதவுகிறது, அதனால் மரங்கள் வெகு வேகமாக நல்ல முறையில் வளர்கிறது.



Teak trees of TIST Program

TIST திட்டத்தில் உள்ள தேக்கு மரங்கள்

## One day training program for Vellore Small Groups in January 2010

TIST India has planned to organize a one day training program for the Small Groups of Vellore District. All the groups of Vellore can give their requirement to their Coordinator before 20th of January 2010, so that, we can prepare a good and effective training modules. TIST India is planning to bring in the following to the participants through the training:

- To enlighten the participants about TIST Program
- Utilization of land effectively apart from tree planting
- To make the participants understand what is banking
- Agriculture is very important
- To help the upcoming new groups to understand and improve their activities
- What is carbon trading

## வேலூர் சிறுகுழுக்களுக்கு ஜனவரி 2010ல் ஒரு நாள் பயிற்சி முகாம்

TIST இந்தியா வேலூர் சிறுகுழு உறுப்பினர்களுக்கு வருகிற ஜனவரி மாதம் ஒரு நாள் பயிற்சி முகாம் ஒன்று ஏற்பாடு செய்து உள்ளது. வேலூரில் உள்ள எல்லா குழுக்களும் அவர்களுக்கு எந்த வகையில் பயிற்சி வேண்டும் என்று வருகிற ஜனவரி 20ம் தேதிக்குள் TIST ஒருங்கிணைப்பாளர் இடம் கூற வேண்டும். TIST இந்தியா கீழே வரும் முக்கிய அம்சங்களின் அடிப்படையில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்து உள்ளது.

- உறுப்பினர்களுக்கு TIST திட்டத்தை திருத்தமாகவும், தெளிவாகவும் எடுத்துரைத்தல்
- நிலத்தில் மரம் நடவு செய்த பின்னும் நிலத்தை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்தலாம்
- உறுப்பினர்களுக்கு வங்கியில் செய்யப்பெறும் பணி வகைகளை எடுத்துரைத்தல்
- விவசாயம் செய்வது ஒரு நல்ல செயல்
- புதிதாக சேரும் சிறுகுழுக்களுக்கு அவர்களது அன்றாட வேலைகளை இன்னும் சிறப்பாக எவ்வாறு செய்வது
- கார்பன் வாணிகம் என்றால் என்ன



TIST Training program which happened in Tiruvannamalai on 24.09.2009
24-09-2009 அன்று திருவண்ணாமலையில் நடந்த TIST பயிற்சி கூட்டம்

## Intercropping is very important

Keeping the land idle without any crop is a wrong idea says this energetic women member of Sarmila Small Group of Tindivanam Center. She says that, their group has about 2,000 teak and 150 cotton trees. We don't stop our hard work just working for trees alone. We mainly concentrate to get good yield from the short time intercrops, this automatically helps the trees to grow well, which will get us good yield in the long run. Mostly, we prefer bottle guard, ridge guard and groundnut. A small portion of the yield will be used for our own use and the major portion will be sold to the vegetable agents who come from Chennai to our village.

## ஊடுபயிர் செய்வது மிக முக்கியமாகும்

நிலங்களில் ஒன்று செய்யாமல் காலியாக வைத்து இருப்பது மோசமான அல்லது நியாயமற்ற செயல் ஆகும் என்று திண்டிவனம் மையத்தில் உள்ள சர்மிளா சிறுகுழுவின் இந்த பெண் உறுப்பினர் கூறுகிறார். மேலும் அவர் கூறுகையில் அவர்களின் குழுவிடம் 2000 தேக்கு மரங்கள் மற்றும் 150 இளவம்பஞ்சு மரங்கள் உள்ளன என்று கூறினார். நாங்கள் எங்களது உழைப்பை வெறும் மரங்கள் நடவுவதற்க்கு மட்டும் காட்டமாட்டோம். முக்கியமாக நாங்கள் மரங்களுக்கிடையே ஊடுபயிர் செய்து நல்ல இலாபம் பார்க்க முயற்சிக்கிறோம். இவ்வாறு ஊடுபயிர் செய்கையில் மரங்கள் தானாகவே வளர்ந்து எதிர்காலத்தில் எங்களுக்கு நல்ல வருமானத்தை பெற்று தரும். பெரும்பாலும் நாங்கள் சுரக்காய், பீர்க்கங்காய் மற்றும் வேர்கடலை வகைகளை பயிர் செய்வோம். இந்த குறுகிய கால பயிர்வகைகளின் விளைச்சலின் சிறிய பங்குகளை எங்களது வீட்டிற்க்கு பயன்படுத்துவோம், மற்றவற்றை சென்னையில் இருந்து வரும் காய்கறி விற்பனை செய்யும் பிரதிநிதிகளிடம் விற்றுவிடுவோம்.



Women member of Sarmila Small Group of Tindivanam Center in the middle of their Teak tree grove displaying the yield from the intercrop

திண்டிவணம் மையத்தில் உள்ள சர்மிளா சிறுகுழுவின் பெண் உறுப்பினர் அவர்களது தேக்கு மர தோப்பின் நடுவில் உள்ள பீர்க்கங்காய் (ஊடுபயிர்) பந்தலின்

Now we have ridge guard in our land, last week we sold few kgs to an agent. During summer season, there is a great demand for bottle guard and ridge guard and that's the reason we have selected these two vegetables. Yes, it is a great challenge to take care of these crops, but the returns gives us smile and more important is that, we never have a feeling that we are working for the trees, but still our trees are healthy, the secret for this intercropping. We welcome the members of other small groups to our groves to see our activity and learn to use the land effectively.

இப்போது எங்கள் நிலத்தில் பீர்க்கங்காய் உள்ளது, போன வாரம் சில பீர்க்கங்காய்களை வியாபார பிரதிநிதிகளிடம் விற்றோம். சுரக்காய் மற்றும் பீர்க்கங்காய்கள் வளர்ப்பது மிக கடினமான ஒன்று ஆனால் வெயில் காலங்களில் இந்த காய்கறி வகைகளுக்கு நல்ல வரவேர்ப்பு உண்டு, நல்ல இலாபம் கிடைக்கும் இதனால் நாங்கள் இந்த பயிர் வகைகளை தேர்வு செய்தோம். மரங்களுக்கு நாங்கள் உழைக்கிறோம் என்றே எங்களுக்கு தெரியவில்லை ஆனாலும் எங்கள் மரங்கள் நன்கு வளர்கின்றன, இதற்கு முக்கிய காரணம் ஊடுபயிர். மற்ற குழுக்களை சார்ந்த உறுப்பினர்களை எங்கள் தோப்புகளுக்கு வந்து எங்களது நல்ல செயல் முறைகளை பார்க்கும்மாறு அழைக்கிறோம்.



Women member of Sarmila Small Group of Tindivanam Center in their Teak tree grove

திண்டிவணம் மையத்தில் உள்ள சர்மிளா சிறுகுழுவின் பெண் உறுப்பினர் அவர்களது தேக்கு மர தோப்பில்

## Free seedlings from Rotary Club for TIST members of Yeriyur Village

Rotary Club is a worldwide spread club, which concentrates on several development activities. To expand the shrinking greenery and to help the poor farmers, Rotary Club (Chennai & Vellore) approached TIST and distributed free Teak seedlings to TIST Small Groups. On 18-12-2008 the members of Rotary Club met TIST members at Yeriyur Village at Vellore and explained them about the importance of trees and encouraged them by distributing free seedlings. On the 18-12-2009 meeting, Mr.Raja Seenivasan (Dist. Chairman Com.Ser. Dev,) participated and expressed to the TIST members that in future Rotary will help TIST members in several ways. He also said that the free seedling distribution to TIST members will be a continuous every year project of Rotary. TIST India along with TIST Small Groups conveys a big thanks to the Rotary Club (Chennai & Vellore). TIST India conveys special thanks to Rtn.Raja Seenivasan and Rtn.Thiagarajan.

## ஏரியுர் கிராமத்தை சார்ந்த TIST உறுப்பினர்களுக்கு ரோட்டரி கிளபிடம் இருந்து இலவச கன்றுகள்

ரோட்டரி கிளப் உலகம் எங்கும் பரவி உள்ள ஓர் மிக பெரிய பொது நோக்கு உறுப்பினர்களின் கழகமாகும். இக்கிளப்பை சார்ந்த (சென்னை மற்றும் வேலூர்) அங்கத்தினர்கள் குறுகி வரும் பசுமையை விரிவுப்படுத்தவும் மற்றும் ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்யவும் முடிவு செய்து TIST இந்தியாவை அணுகி TIST உறுப்பினர்களுக்கு தேக்கு கன்றுகளை இலவசமாக வழங்கினார்கள். 18–12–2009 அன்று ரோட்டரி அங்கத்தினர்கள் வேலூரில் உள்ள ஏரியுர் கிராமத்தில் TIST உறுப்பினர்களை சந்தித்து மரங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து அவர்களை ஊக்கப்படுத்தி இலவச கன்றுகளை வழங்கினார்கள். 18–12–2009 அன்று நடந்த கூட்டத்தில் திரு. ராஜா சீனிவாசன் அவர்கள் (Dist. Chairman Com. Ser. Dev.) கலந்து கொண்டு TIST உறுப்பினர்களுக்கு பல்வேறு விதத்தில் ரோட்டரி உதவ தயாராக உள்ளது என்று மகிழ்ச்சியுடன் கூறினார். மேலும் அவர் TIST உறுப்பினர்களுக்கு இலவச கன்று வழங்கும் திட்டத்தை ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து செயல்படுத்துவோம் என்று உறுதியளித்தார். TIST இந்தியா TIST உறுப்பினர்களோடு சேர்ந்து ரோட்டரி கிளப்பிற்க்கு (சென்னை மற்றும் வேலூார்) மிக பொிய நன்றியை தெரிவித்துக்கொள்கிறது. ரூராட்டெரியன் தியாகராஜன் மற்றும் ரோட்டெரியன் ராஜா சீனிவாசன் இருவருக்கும் TIST இந்தியா சிறப்பான நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.





Members of Rotary Club (Vellore & Chennai) with TIST memebrs at Yeriyur Village
ரோட்டரி கிளப் (சென்னை மற்றும் வேலூர்) அங்கத்தினர் ஏரியூர் கிராமத்தில் TIST உறுப்பினர்களுடன்

## டிஐஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஐஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.

3. டிஐஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.

4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,

5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

6. டிஐஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).

7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஐஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.

8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.

9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஐஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.

10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.

11. டிஐஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.

13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.

14. குழுவின் அங்கத்தினர்கள் டிஐஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்கும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.